ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2026/45 – 2017 ජූලි මස 07 වැනි සිකුරාදා – 2017.07.07

*2026/45 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரச கமத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டம்***

*2 ஆம் பிரிவின்கீழான கட்டளை*

*பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் கார்டிஹோ சரத் சந்திரலால் பொன்சேக்கா ஆகிய நான், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினதும் தேசியக் கொள்கைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன், 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரச கமத்தொழிற் கூட்டுதம்தாபனங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் 1978 ஆம் ஆண்டு பெப்புருவரி 1 ஆந் தேதிய 302/12 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை, இக்கட்டளைமூலம் திருத்துகின்றேன் :-*

1. (5) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

   "(5) அதிகாரசபையின் பிரதான தொழிலிடம் கொழும்பில் இருத்தல் வேண்டுமெனக் கூறுகிறேன் ;"

2. (7) ஆம், (8) ஆம் பந்திகளை நீக்கிவிடுவதன் மூலமும்.

3. "முதலாம் அட்டவணை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அட்டவணை" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்:

4. அட்டவணையின் (1) ஆம் விடயத்தில், "அமைச்சரால் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடப்பரப்புகளில் கமத்தொழில் பன்முகப்படுத்தல்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "கமத்தொழில் பன்முகப்படுத்தல்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:

5. அட்டவணையின் (5) ஆம் விடயத்தில், "நடவடிக்கைகளையும் எடுத்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக ; "நடவடிக்கைகளையும் எடுத்தல்; " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:


*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

6. அட்டவணையின் (5) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(6) வர்த்தகமுறை வேளாண்மை அல்லது வேறுதேனும் கமத்தொழில் தொழில்முயற்சியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கமத்தொழில் முதலீடுகளை ஊக்குவித்தலும், மேம்படுத்துதலும், அவற்றுக்கு உதவுதலும் ;

(7) ஒன்றில் அதிகாரசபையுடன் பங்காண்மையிலோ அல்லது அதிகாரசபையின்றியோ அரசாங்க சார்பில்லாத முகவர் நிலையங்களினால், தனியார்துறையினால் அல்லது கமக்காரர்களினால் பொறுப்பேற்கப்பட்ட அத்தகைய கமக் - கைத்தொழில் முதலீடுகளைத் தாபிப்பதற்கும் முகாமை செய்வதற்கும் திட்டங்களை வகுத்தமைத்து நிறைவேற்றுதலும், சேவைகளை அளித்தலும், நிபுணத்துவத்தை வழங்குதலும்.".

7. இரண்டாம் அட்டவணையின்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அதனை நீக்கிவிடுவதன் மூலமும்.

8. இக்கட்டளையில் -

(அ) "கமக் - கைத்தொழில்" என்பது, உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சந்தைக் கோரிக்கைகளை இலக்குவைத்து வேளாண்மைத் துறைக்குப் பொருட்சார் அளிப்புகளை வழங்கி, கமத்தொழில் மூலப்பொருட்களை உருமாற்றும், விநியோகிக்கும் அல்லது வேறுவகையாக அவற்றுக்குப் பெறுமதி சேர்க்கும் ஏதேனும் தொழில்முயற்சி அல்லது நிறுவனம் என்று பொருளாகும்;

(ஆ) "வர்த்தகமுறை வேளாண்மை" என்பது, சந்தையை இலக்குவைத்து பயிர் வேளாண்மையை,கால்நடை வேளாண்மையை மற்றும்தோட்ட வேளாண்மையை மலர்ச்செடி வளர்ப்பு மற்றும்பட்டுப்பூச்சிவளர்த்தல் உள்ளடக்கும்; அத்துடன்

(இ) "ஏனைய கமத்தொழில் தொழில் முயற்சிகள்" என்பது, இழைய வளர்ப்பையும், உயிரி உரத்தை உற்பத்தி செய்தலையும், உணவையும் உட்கொள்ளத்தகு எண்ணெயையும் பதனிடுதலையும், மருந்துசார் பயிர்களைப் பயன்படுத்தி மருந்துப்பொருட்களை உற்பத்தி செய்தலையும், கமச் சுற்றுலாப் பயணத்துறையையும், கமத்தொழில் எந்திரத்தொகுதியையும் வேறு துணைநிலைச் சாதனங்களையும் உற்பத்தி செய்தலையும் மற்றும் கமத்தொழில், தோட்ட வேளாண்மை அத்துடன் பெருந்தோட்டப் பயிர்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அத்தகைய வேறு கைத்தொழில்களையும் உள்ளடக்கும்.

பீல்ட் மார்ஷல் கார்டிஹேவா சரத் சந்திரலால் பொன்சேக்கா,
பிராந்திய அபிவிருத்தி அமைச்சர்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
இல. 1090,
ஸ்ரீ ஜயவர்தனபுர வீதி,
ராஜகிரிய,
2017, யூலை 07.

07 - 762

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.